# வணிகக்கல்வி

## வணிகத்தின் சமூகப் பொறுப்புக்களும் விழுமிங்களும்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

# வணிக்த்தின் சமூகப் பொறுப்புக்களும் விழுமியங்களும்

2.0 வணிகச் சூழலுக்கு இயைபாக்கமடைவதற்கு வணிகமாகது சமூக ரீதியான பொறுப்புக்கள், விழுமியங்கள் மீது கவனம் செலுத்தும் முறையினை கேட்டறிவார்.

2.1 வணிகங்களினால் சமூகரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.

**சமூகப்பொறுப்பு**

வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் இயன்றளவில் சரியாகவும் நியாயமாகவும் சமூகரீதியான பொறுப்புக்கள் நிறைவேறும் வகையில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற செயற்பாடு சமூப்பொறுப்பு எனப்படும்.

**சமூகப்பொறுப்புடன் தொடர்புடைய வரைவிலக்கணங்கள்:**

நிலைபேறான அபிவிருத்திக்கான உலக வணிக அமைப்பு (World business Council for sustainable Development).

"முழுமையான சமூகத்தினதும், பிரதேச சமூகம், ஊழியர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றதும் வணிக விழுமியங்களுடன் தொடர்ச்சியாக வணிகத்தின் வாழ்தன்மைக்கு அர்ப்பணிப்புச் செய்தல் வணிகத்தின் சமூகப் பொறுப்பாகும்"

**Mallen Barker**

" சமூகத்தில் நேர் தன்மை கொண்ட தாக்கங்களை உருவாக்குவதற்கு வணிக செயற்பாடுகளை எவ்வாறு முகாமை செய்யலாம் என்பது பற்றி கருத்து சமூகப் பொறுப்பாகும்".

**Narayana Murthy - நாராயண மூர்த்தி**

" வாடிக்கையாளர், ஊழியர்கள், சமூகம், அரசு, சூழல் போன்ற அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் நியாயமான முறையில் கருமமாற்றி பங்காளர்களுக்கு உச்சப்பெறுமானம் ஒன்றை உருவாக்கி கொடுப்பதே சமூகரீதியதன பொறுப்பாகும்."



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**ஐக்கிய அமெரிக்க குடியரசு (USA)**

" தனது வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும், அதன் மூலம் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாகவும் தனிப்பட்ட ரீதியில் வணிகங்களே பொறுப்பாகும் எனக் குறிப்பிடுவது சமூகப் பொறுப்பாகும்."

**பிலிப்பைன்ஸ்**

" வணிகங்கள் சமூகத்திற்கு மீளச் செலுத்தப்படுகின்ற செயற்பாடுகளே சமூகப் பொறுப்பாகும்."

வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் மீது அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள்

- வணிகப் போட்டி
- பூகோளமயமாதல்
- இலத்திரனியல் வணிகம்
- சூழல் மாசடைதல்

வணிகமொன்றினால் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய பிரதான தரப்பினர்கள்.

1. உரிமையாளர்
2. ஊழியர்
3. வாடிக்கையாளர்
4. சமூகம்

பின்வரும் தரப்பினர்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்கள்

**ஊழியர்கள்** ⇨

- தொழிற்பாதுகாப்பு
- சமத்துவமாக நடத்துதல்
- சிறந்த ஊழியர் தொடர்பு
- சுகாதார வசதிகள்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




**சமூகம்** ⇒
- வேலை வாய்ப்பிற்கு பங்களிப்புச் செய்தல்
- வரி செலுத்துதல்
- கழிவுப்பொருள் முகாமைத்துவம்
- சமூக நலன்புரிச் சேவைகள்
- நேர் உற்பத்தி
- சூழலை நேசிப்பவராகக் கடமையாற்றுதல்

**வாடிக்கையாளர்** ⇒
- நியாயமாக நடந்து கொள்ளல்
- தேசத்தை இழிவுபடுத்தல்
- உரிமைகளைப் பாதுகாத்தல்

**உரிமையாளர்கள்** ⇒
- நியாயமாக உழைப்பைப் பெற்றுக் கொடுத்தல்
- பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல்
- வினைத்திறனாகவும் நேர்மையாகவும் முகாமைத்துவக் கருமங்களை நிறைவேற்றுதல்

சமூகப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் வணிகம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்:

1. வணிகத்தின் வாழ்தன்மை உறுதிப்படுத்தப்படுதல்
2. வணிகம் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளுதல்
3. வணிகத்தின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்படுதல்
4. வாடிக்கையாளரை திருப்தியடையச் செய்தல்
5. வணிகத்தின் நோக்கம், குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றுதல் இலகுவாக இருத்தல்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சமூகப்பொறுப்பு தொடர்பான சர்வதேச தரங்கள்

ISO 26000 - சமூகப் பொறுப்புக்கள்

ISO 14000 - சூழல் முகாமைத் தரம்

SA 8000 - சமூகப்பொறுப்பு சான்றுபடுத்தலாகும்

AA 1000 - Accountability தரம்.

வணிகங்கள் தமது சமூகப்பொறுப்புக்களை வெளிக்காட்டுவதற்காக பின்பற்றப்படும் உபாயங்கள்

- அறிக்கைகளை வெளியிடல்
- ஒளிவு மறைவின்றி செயற்படுதல்
- தத்துவம், கொள்கைகளைப் பின்பற்றுதல்
- குறியீடுகளைப் பயன்படுத்தல்
- வகைகூறல் தன்மையினைக் கொண்டிருத்தல்.

**சமூகப் பொறுப்புக்கள் :**

**செயற்பாடு 1:**

“மலரவன் ரேஸ்ரி” என்பது ஒரு உணவுச்சாலையாகும். இதன் உரிமையாளர் மலரவன் ரூபா 300000 இனை மூலதனமாக இட்டு இவ் வணிகத்தை ஆரம்பித்திருந்தார். வதனன் எனும் முகாமையாளர் நான்கு ஊழியர்களுடன் இணைந்து இவ்வணிகத்தை நடாத்திவருகின்றார். முகாமையாளர் தனது உறவினரான ஊழியர் ஒருவருடன் மாத்திரம் சுமூகமாக நடந்து கொள்வதுடன் ஏனைய ஊழியர்களுடன் மிக கடுமையாக நடந்து கொள்கின்றார். அத்துடன் வாடிக்கையாளர்களுடனும் முகாமையாளர் நட்புறவுடன் நடந்து கொள்வதில்லை. ஏனைய உணவுச் சாலைகளுடன் ஒப்பிடும் போது இவ்வணிகத்தின் உணவுப் பொருட்களின் விலைகள் மிகக்கூடியதாகவே காணப்படுகிறது. ஊழியர்களிடமுள்ள கூடிய நம்பிக்கை விசுவாசம் சிறந்த பண்பு என்பவற்றின் காரணமாகவே கூடுதலான வாடிக்கையாளர்கள் இவ்வணிகத்தை நாடி வருகின்றனர். இதனால் நிறுவன இலாபத்திலும் மந்தநிலையே காணப்படுகின்றது. உரிமையாளர் சமூக நலனில் அக்கறை கொண்டவராவர். அதனால் கழிவுப் பொருட்களை அகற்றுதல், சமையல் முறை என்பவற்றுக்கு சிறந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். நிறுவனத்தில் முகாமையாளரின் நடவடிக்கை தொடர்பில் உரிமையாளர் அறிந்திருக்கவில்லை.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து

1. பின்வரும் தரப்பினர்கள் தொடர்பில் மீறப்பட்டுள்ள சமூகப் பொறுப்புக்களைக் குறிப்பிடுக.
    1. உரிமையாளர்
    2. ஊழியர்
    3. வாடிக்கையாளர்

2. இந்நிறுவனத்தில் சமூகப்பொறுப்புத் தொடர்பில் மாற்றியமைக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை?



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk